Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Women in the Perspective of Thiruvalluvar

**Dr. T. K. Danesh,** Assistant Professor of Tamil, Noorul Islam Centre For Higher Education, Kumara Koil, Thukalai - 629180, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-3802-0524
**DOI: 10.5281/zenodo.14744818**

## Abstract

*There are two genders in the natural world; they are male and female. They are revered as goddesses in Tamil society but there are times that the women who are treated like goddesses are enslaved. This sort of slavery of women has been practised as slaves everywhere in society since early times. Men acted as the authority in women's lives. Although a woman looks soft physically, she is seen as strong mentally. Women have to bear anything and go to the next level in life. Such women are seen in society as equals instead of men. When the world appeared and the social structure came as a result of the development of the people's civilization, a change was seen in the conditions of treating women as slaves, later the system of keeping women as slaves was widely seen everywhere in the world. Tamil society was no exception of it. But women are a true source of dignity and intelligence. Thiruvalluvar has highlighted the merits of women in "Thirukkural" which was written two thousand years ago. This article is intended to make realize the benevolence of women.*

**Keywords:** Women, Goddesses, Social Life, Thiruvalluvar, *Thirukkural*.

## References

[1] Ananthan, S. *Tamil Ilakkiya Varalaru*. Kanmani Pathippagam, Tiruchi, June 2005.
[2] Kumarasamy, S.N. *Penniyam Nokkil Barathiyar*, 2005.
[3] Subramaniam, S. V. *Tholkappiya Thelivurai*. Manivasakar Pathippakam, Parimunai, Chennai, October, 2010.
[4] Narayanasamy, R, Pulavr. *Thirukkural Thelivurai*. New Century Book House, Chennai-98, 2003.
[5] Prema, R. *Penniyam*. Ulakat Thamizharhcchi Niruvanam, Chennai, 1994.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# திருவள்ளுவர் பார்வையில் பெண்கள்

**முனைவர் தா. கோ. தனேஷ்**, உதவிப்பேராசிரியர், நூருல் இஸ்லாம் உயர்கல்வி மையம், குமாரகோயில், தக்கலை-629180, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-3802-0524**
**DOI: 10.5281/zenodo.14744818**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் இருவேறு இனங்கள் இருந்தாலும் ஆண், பெண் என இருபாலரும் சமூகத்தில் தெய்வமாகப் போற்றப்படுகிற பெண் தெய்வமாக நடத்தப்படுகிறாள். இந்த பெண்ணை ஏன் ஆதிகாலம் முதலே சமூகம் எங்கும் அடிமைகளாகவே கடைப்பிடிக்கிறார்கள் என்று யோசித்தால் ஆண்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். ஒரு பெண் உடல் ரீதியாக மென்மையாக இருந்தாலும், மனதளவில் வலிமையான பெண்ணாக பார்க்கப்படுகிறாள், எதையும் தாங்கிக்கொண்டு வாழ்க்கையில் அடுத்த கட்டத்திற்கு செல்லும் திறன் கொண்டவள். அத்தகைய பெண் சமூகத்தில் ஆண்களுக்கு சமமாக பார்க்கப்படுகிறாள். ஆண்கள் உலகம் தோன்றி சமூகக் கட்டமைப்பு மக்களின் நாகரிக வளர்ச்சியின் விளைவாக வந்தபோது பெண்ணை அடிமையாக நடத்தும் நிலைகளில் மாற்றம் காணப்பட்டது. பின்னர் பெண்ணை அடிமையாக வைத்திருக்கும் முறை பரவலாகக் காணப்பட்டது. உலகில் எங்கு உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளில் பெண்களின் சிறப்பை அழகாக எடுத்துரைத்துள்ளார்.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்கள், தெய்வங்கள், சமூக வாழ்க்கை, திருவள்ளுவர், *திருக்குறள்.*

**முன்னுரை**

பெண்களை அன்று முதல் இன்று வரை வாழ்த்தி வணங்கியவர்கள் இருந்தாலும் பெண்களுக்கு எதிரான சமூகப் பிரச்சினைகள் இன்றும் பெருகி வருகிறது . "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" தமிழகத்தில் உள்ள சில பழமொழிகள் எல்லாம் பெண்மையை ஏளனம் செய்யும் சொற்கள்.அன்று முதல் இன்று வரை பெண்ணினத்திற்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ இன்னல்கள் நடந்து வருகிறது.இதை மாற்ற பெண்ணியம் பல முயற்சிகளுடன் செயல்படுகிறது. நீதி நூல்களில் காலத்தால் முற்பட்டதும், பொருட்களின் கருத்து வளத்தில் உயர்ந்தது மாகத் திகழ்வது திருக்குறள்.அறநூல்களில் தலையானதும் திருக்குறள்.தமிழர் மட்டும் அல்லாது உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நூல் திருக்குறள். அறக்கருத்துக்களை சொல்லி வந்த வள்ளுவர் பல சிறப்புகளை சொல்ல தவறவில்லை .குறைந்த சொற்களில் நிறைவான கருத்தை கூறிய வள்ளுவர் பெண்களின் இயல்பு மற்றும் சிறப்புகளை அழகாக எடுத்துரைத்துள்ளார்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


வள்ளுவர்.வள்ளுவர் பார்வையில் திருவள்ளுவர் கருத்துக்களை இக்கட்டுரையின் கீழ் காணலாம்.

**பெண்ணிய விளக்கம்**

தமிழில் பெண்ணியம் என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில 'Feminism' என்று கூறுவோம். பெண் என்ற சொல்லுக்கு பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் என்று பொருள். தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுாரிமை ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கி வருகின்றன. "எல்லா தரப்புப் பெண்களுக்கும் உரிமை பெற்று தருவதே பெண்ணியம்" என்றார் (குமாரசாமி.சி. ப.9). "பெமினிசம் எந்தச் சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணியவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணிலைக் கொள்கை என்று வழங்கப்படுகிறது இவற்றில் பெண்ணிலை வாதம் என்ற சொல் ஏற்புடையது, என்றாலும் இந்த சமூகவியல் நோக்கில் பெரிது எடுத்தாளப்படும் ஒன்றாகும் .எனவே கல்வியாளர்கள் பெண்ணியம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்." (இரா.பிரேமா. ப. 18)

**பெண்- இலக்கண வரையறை**

பெண்களைப் பற்றிய ஆதாரங்கள் முதல் நூல்களான தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. இவை பெண்களை ஆண்களுக்கு சமமான நிலையில் காட்டவில்லை. வீரம், தலைமை தாங்கும் பண்பு,முதலியவை ஆண்களுக்கு உரியவை என்று ஆண்களை உயர்த்துக்கின்றன. அச்சம், நாணம், மடம், அடக்கம், அமைதி, நேர்மை போன்ற பண்புகளை பெண்களுக்கு உணர்த்துகின்றன.

**அச்சம் நாணும் மட்டும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்., 1045)**
**செறிவும் நிறைவும் செம்மையம் செப்பும்**
**அறிவும் அருமையம் பெண் பாலன் (தொல்., 1155)**

**இல்லாள் கடமைகள்**

ஆண், பெண் இணைந்து செயல்படுவதற்கு இல்லறம் என்கிறோம். வாழ்க்கை துணைநலத்தில் மனையாளின் இயல்பும் கடமைகளும் ஏன் இயல்பாகவே கூறப்பட்டது. இல்லறத்திற்கு தக்க நல்ல பண்புடைகளாக மனைவி இருக்க வேண்டும். தன்னை துணையாகக்கொண்ட கணவனுக்கு வருவாய்க்கு தக்க வாழ்க்கை நடத்த வேண்டும். அத்தகைய குணம் உடையவளே வாழ்க்கை துணை என்ற பெருமை பெறுகின்றாள். இவ்வாறு இல்லறத்துக்கு ஏற்று பண்பு மனைவியிடத்தில் இல்லை எனில் அந்த இல்லற வாழ்க்கையில் வேறு எவ்வளவு சிறப்பு பெற்றிருந்தாலும் பயமில்லை என்பதை

**மறைத்துக் மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்**
**வளத்தக்களர் வாழ்க்கைத் துணை (குறள்., 51)**
**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**எனைமாட்சித் தாயினும் இல் (குறள்., 52)**

மேற்கண்ட குறளில் குடும்பத் தலைவன் தேடிய பொருளை தக்க வகையில் செலவு செய்து அப்பொருள் இல்லத்திற்கு நற்பயனளிக்குமாறு செய்பவள் மனைவி என உணரலாம். இல்வாழ்க்கையில் இணையும் இருவரும் அறத்தை செய்வதற்கு ஏற்ற மனநலமும் ,அறிவும் திறமையும் உடையவராய் இருக்கும்போதே இல் வாழ்வு சிறப்பாக அமையும். பெண்களுக்கு' இல்லக்கிழத்தி' என்னும் முறையில் பலவகையான உரிமைகள் இருந்த போதிலும் அவர்கள் கணவனுக்குரிய உடைமை பொருட்களில் ஒன்றாகவே கருதப்பட்டனர்.

**கற்பு வலியுறுத்தல்**

இலக்கியங்கள் பெண்களின் கற்பின் மேன்மையை புகழ்கின்றார் அதேப்போல திருக்குறளை எழுதிய திருவள்ளுவரும் பெண்களின் கற்பு நெறிகளை புகழ்கிறார். கர்ப்பினில் வழுவாதிருத்தல், கணவனை பேணுதல், தங்கள் புகழ் சான்றோனும் குறையாமல் காத்தல் ஆகிய மூன்று நிலைகளிலும் சிறிதும் வழுவாமல் கடைபிடிப்பவளே 'பெண்' என்று இலக்கண வகுக்கிறார் திருவள்ளுவர்.

**தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண் (குறள்., 56)**

பெண்ணை வாழ்க்கை துணையாக ஆக்கும் திறன் அவளுடைய கற்பின் வலிமையில் உள்ளது. தன்னையும், தன்னை கொண்டவனையும் தனித்தனி உயிர்களாக பிரித்து எண்ணாது பெண்ணின் தன்மையிலிருந்து அவளின் கற்பு பிறக்கிறது. கற்பு என்னும் கலங்கா நிலைமையை தெய்வமும் தொழும் பெய் என்று அவள் கட்டளையிட மழையும் பொழியும் என்கிறார் வள்ளுவர்,

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்., 55)**

ஒரு பெண் கற்பு நெறியில் தவறாமல் இருந்தால் தெய்வமும் அவளின் சொல் கேட்கும் என்பதை திருவள்ளுவர் வெளிப்படுத்துகிறார்.

**பெண்களை போற்றும் அறம்**

அன்பும் அறனும் கொண்டு இல்லறத்தில் மக்கள் வாழ வேண்டும் ஏனெனில் அன்பு வகைமையை குறிக்கும் ஆற்றல் உண்டு. அறம் செய்ய மனம் வேண்டும் மனம் தெளிவு பெற்றால் தான் நல்ல சிந்தனைகள் தோற்றம் வரும் இந்த சிந்தனைகள் மனிதர்கள் ஆரோக்கியத்துடன் வாழ வழி வைக்கும். இயற்கையாகவே பிள்ளையை பெற்றெடுக்கும் பொறுப்பு பெண்களிடையே இயற்கை கொடுத்திருக்கிறது.அதை வளர்க்கின்ற முறையை ஆண் பெண் என்ற இருவரிடமும் கொடுக்கிறது. அதில் அன்பு பெண்களிடம் தான் அதிகம் இருக்கிறது.அதனால் தான் அன்பை இல்லற வாழ்வில் முதலிடம் வைத்தார் வள்ளுவர்.இதனை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது. (குறள்., 45)**

மேற்கண்ட குறள் வாயிலாக இல்லற வாழ்வில் பெண்கள் தான் முதலிடம் பெறுகின்றனர் என்பதை தெரிந்துக்கொள்ளலாம்.

**குடும்ப பணி**

இல்லத்தில் கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவர் ஆதரவாக இருந்து ஒருவரால் ஒருவர் சிறப்படைய வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. ஆனால் அதற்கு மேலாக அவர்கள் செய்ய வேண்டிய பணி நல்ல மக்களைப் பெற்று வளர்ப்பது ஓர் இல்ல தலைவியின் நல்ல பண்பு. அவ்இல்லத்திற்கு ஏற்ப பண்புகளை அவ்வில்லத்திற்கு மங்கலமாகும். ஆனால் அவ்வில்லற மாண்பிற்கு அணிகலமாவது நன்மக்கள் பேறே என்றார் .

**மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்**
**நான்காம் நன்மக்கள் பேறு (குறள்., 60)**

என்று இல்லறம் என்றும் நல்லறமாக செழித்தோங்க நல்ல இல்லத்தரசியின் மாண்பே ஆகும் என்று கூறுகிறார்.

**பெண்ணின் மென்மை**

தலைமகளில் உள்ள குறிப்புகளைக் சுட்டுவதற்கு அவளின் பார்வையை கூறும் போது பெண்மையை மென்மை எவ்வளவு நுட்பமானது என்பதை தெள்ளத்தெளிவாக விளக்கி கூறுகிறார்.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சில் பழம். (குறள்., 1120)**

என்று பூக்களில் மிகவும் மென்மையுள்ள அனிச்ச மலரோடு பெண்களின் மென்மையை ஒப்பிட்டு காட்டுகிறார்.

**தாய்மை நிலைமை**

பெண் பெண் பண்புடைய மக்களை பெறுவதன் வழி தாய்மையின் உயர்வினை புலப்படுத்துகின்றார் .அதனால் தான் தம் மக்கள் ஒரு உயர்ந்த இடத்தை அடைந்து விட்டார் என்ற செய்தியை கேட்ட தாய் மிகவும் மனம் மகிழ்ந்து வியந்து போகிறார் என்பதனை,

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை**
**சான்றோன் எனக் கேட்ட தாய். (குறள்., 69)**

எனவே தான் பெற்ற பிள்ளையின் உயர்வையை நாளும் எண்ணி மகிழ்கிறார். என்பதை திருவள்ளுவர் பெண் தாயாக இருக்கும் போது அவளின் மனநிலையை அழகாக விவரித்து குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

காலம் காலமாக சமூகத்தில் நிலவும் கொடுமைகளும் பெண் கொடுமையும் ஒன்றாகும் .பெண்களை இழிவாக நடத்துதலும் வெறும் போகப் பொருளாக எண்ணி பாலியல்

**Pandian Journal of Women's Studies**

*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*

*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

கொடுமைக்கு உட்படுத்தலும் இல்லற வாழ்க்கை வட்டத்திற்குள் மட்டுமே பெண்கள் என்ற நிலை ஆண்டாண்டு காலமாய் நடந்து வருகிறது .ஆண் பெண் இணைந்து செயல்படுவதற்கு இல்லறம் என்கிறோம் .அந்த இல்லறத்தில் பெண்களுக்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தன்னுடைய திறமையை பெண் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடவில்லை தன்னுடைய கணவனின் வருவாய்க்கு தக்க செலவு செய்ய வேண்டும் என்றே குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். மேலும் பெண்களுக்கு ஆன கற்பு நிலையை புகழ்ந்து பேசுகிறார் பெண்களின் குணநலத்தில் அன்பு இயல்பாகவே கலந்து இருக்கிறது .நல்ல குழந்தைகளை பெற்றெடுப்பது மேலும் அவர்களை சான்றோர் ஆக்குதலும் பெண்களின் கடமையாகவே வள்ளுவர் குறிப்பிடுகிறார். பெண்களுக்கு மென்மையானகுணம் உண்டு என்றும், அந்த மென்மையான குணம் மலரின் மிக மெல்லிய மலரான அனிச்ச மலரை விட மென்மையானது என ஒப்பிட்டு கூறுகிறார். பெண்களை ஆணுக்கு எந்த இடத்திலும் அடிமையாக குறிப்பிடவில்லை. பெண்களுக்குக்குரிய சிறப்புகளை தனித்தனியாக சில இடங்களில் குறிப்பிட்டு கூறினாலும். இல்லறம் நடத்துவதற்கு ஆண் பெண் என்ற இருவரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை குறிப்பிட்டாலும் ஏதோ ஒரு வகையில் ஆணுக்கு இணையாக பெண்ணை குறிப்பிடாமல் ஆணுக்கு அடுத்த நிலையிலே பெண்ணை வைத்து குறிப்பிடுகிறார் என்பதை திருவள்ளுவரின் பெண்ணியப் பார்வையை திருக்குறள் வழி அறிந்துக் கொள்ளலாம்.

**குறிப்புகள்**

[1] ஆனந்தன்,சு. *தமிழ் இலக்கிய வரலாறு*. கண்மணி பதிப்பகம், திருச்சி, ஜுன் 2005.

[2] குமாரசாமி, சி,என். *பெண்ணியம் நோக்கில் பாரதியார்*, 2005.

[3] சுப்பிரமணியம்,ச,வே. *தொல்காப்பிய தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, அக்டோபர் 2010.

[4] நாராயணசாமி, இரா, புலவர். *திருக்குறள் தெளிவுரை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98. ஏழாம் பதிப்பு பிப்ரவரி, 2003.

[5] பிரேமா, இரா. *பெண்ணியம்*. உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை, 1994.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.